# 2018–ம் ஆண்டு நவம்பர் மாதம் 1–ஆம் தேதி (1.11.2018) வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 (வார்டு எண்.50)-ல் ஈரோடு கிராமம்,ரீ.ச.எண்.1243/1B1 பகுதியில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் விற்பனை செய்யப்பட்ட மனையினை வரன்முறைப்படுத்த வேண்டி மனுதாரார், உறுப்பினர் செயலர் ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், உறுப்பினர் செயலர் அவர்களின் நடவடிக்கைகளின் மூலம் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண்.45/2018 என எண்ணிட்டு (Sold Plot Frame work) (விற்பனை செய்யப்பட்ட செய்யப்பட்ட மனை அமைப்பு வரைபடம் ) வழங்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை செய்யப்பட்ட மனைப்பிரிவில் உள்ள சாலையினை ஈரோடு இணை சார்பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.6441/2018 பதிவு நாள்.15.10.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலையினை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம் கோப்பு எண். 3779/18/இ1

**164. அனுமதிக்கப்பட்டது.**

2. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 (வார்டு எண்.60)-ல் ஈரோடு வட்டம், சர்க்கார் சின்ன அக்ரஹாரம் கிராமம், ரீ.ச.எண்.33/1 பகுதியில் 71365 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, வரன்முறை வேண்டி மனுதாரர் திருமதி.கே.மரகதவள்ளி என்பவர் உறுப்பினர் செயலர் ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 64/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள், மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு இணை சார்பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.6649/2018 பதிவு நாள்.25.10.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம் கோப்பு எண். 4841/18/இ1

**165. அனுமதிக்கப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 (வார்டு எண்.60)-ல் ஈரோடு வட்டம், பீளமேடு கிராமம் ரீ.ச.எண்.20/1-ல் 8600 சமீ (92570.40 ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, வரன்முறை வேண்டி மனுதாரர் திருமதி.எஸ்.ஜெயகீதா என்பவர்

உறுப்பினர் செயலர் ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 59/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் , மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு இணை சார்பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.6654/2018 பதிவு நாள்.25.10.2018 - ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம் கோப்பு எண். 4792/18/இ1

**166. அனுமதிக்கப்பட்டது.**

4. ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம்,ஈரோடு சார் பதிவு மாவட்டம்,ஈரோடு வட்டம், முன்பு **76** திண்டல் கிராமம், தற்போது இது **33 திண்டல் கிராமம்**, பழைய க.ச.**146**,இதன் புதிய ரீ.சர்வே எண்.**109/1** நெ.பு.ஹெக்.**0.75.0**-க்குத் தரம் ரூ.**1.51**, பழைய பட்டா எண்.**41**,புதிய பட்டா எண்.**1003**,இதில் தற்போது உட்பிரிவு செய்து உள்ளதின்படி புதிய ரீ.சர்வே எண்.**109/1B,** பு.ஹெக்.**0.46.0**-க்குத் தரம் ரூ.**0.92,** இது பூராவும், இதுவும், பின்னும்,N **33 திண்டல் கிராமம்**, பழைய க.ச.**146**,புதிய ரீ.சர்வே எண்.**109/2A**நெ.பு.ஹெக்.**0.34.5**-க்குத் தரம் ரூ.**0.69**, பழைய பட்டா எண்.**11**,புதிய பட்டா எண்.**428**,இது பூராவும்,ஆக மேற்கண்ட N (2) இரண்டு நெ. காலைகளுக்கும் சேர்த்து மொத்தம் பு.ஹெக்.**0.80.5**-க்குத் தரம்ரூ.**1.61** இதற்கு பு.ஏ.**1.98¾**செண்ட் இந்த வகை விஸ்தீரண பூமியை ஒட்டி ஏற்கனவே நிலையிலுள்ள **30** அடி அகலமுள்ள தென்வடல் நீள ரோட்டை அனுசரித்து **30**அடி அகலத்தில் தென்வடலாக ஒரு ரோடும்,**30** அடி அகலத்தில் கிழமேலாக ஒருரோடும் மற்றும்**23** அடி அகலத்தில் கிழமேலாக இரண்டு ரோடுகளும் ஏற்படுத்தி, பூங்காவிற்கான பொது இடம் ஒதுக்கி, மனையிடங்களாகப் பிரிவினை செய்து சேலம் நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கோப்பு எண்.**14294/2018,** நாள்:**23.10.2018,** சே.ம. **3**-ன்படிஅனுமதி வழங்கப்படவுள்ள **"Selva Shakthi Garden"**எனப்பெயர்வைத்து உள்ளதில் மேற்படியார்களின் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்கிற முறையில் நான்நாளது தேதியில் ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக எழுதிக் கொடுத்து வழங்கும் **30'**அடி அகல தென்வடல் நீள ரோடு ஒன்றும்,**30'**அடி அகல கிழமேல் ரோடு ஒன்றும் மற்றும்**23'**அடி அகல கிழமேல் ரோடுகள்இரண்டும், பின்னும்,பூங்காவிற்கான பொது இடத்துக்கும் செக்குப்பந்தி விபரம் :-இதில்,

அயிட்டம் நெ.**1,**N கிராமம்,N ரீ.சர்வே எண்களில்,

**30'**அடி அகலமுள்ளதென்வடல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி :-

முதலிட்டாளர்கள் பயன்பாடு III-வதுஇடத்துக்கும்,சைட் நெ.**10**முதல் **13** வரை உத்தேசிக்கப்பட்டுள்ள மனையிடங்களுக்கும்,**23'**அகல கிழமேல் ரோட்டுக்கும்,சைட் நெ.**14**முதல்**21**வரைஉத்தேசிக்கப்பட்டுள்ள மனையிடங்களுக்கும்,பூங்கா**1**இடத்துக்கும்**கிழக்கு,** முதலிட்டாளர்கள்பயன்பாடு II-வது இடத்துக்கும் மற்றும்**30'** அடி அகல கிழமேல் ரோட்டுக்கும்,சைட் நெ.**9,** சைட் நெ.**2**ஆக உத்தேசிக்கப்பட்டு உள்ள மனையிடங்களுக்கும்,**23'**அகல கிழமேல் ரோட்டுக்கும், முதலிட்டாளர்கள்பயன்பாடு I-வது இடத்துக்கும்,சைட் நெ.**1** ஆக உத்தேசிக்கப்பட்டுள்ள மனை இடத்துக்கும்,கடையிடத்துக்கும்மற்றும் பூங்கா**2**இடத்துக்கும் **மேற்கு**,நிலையில் உள்ள **25'** அடி

அகல கிழமேல் நீள பொது ரோட்டுக்கும் **வடக்கு**,ரீ.ச.111-ல்நிலையிலுள்ள தென்வடல் நீளபொது ரோட்டுக்கும் **தெற்கு**,இதன் மத்தியில் கிழமேலாக **வடபுறம்30'0"**முப்பது அடிகளும்,கிழமேலாக **தென்புறம்30'0"**முப்பது அடிகளும்,தென்வடலாக **கிழபுறம்459'0"**நாநூற்றி ஐம்பத்தி ஒன்பது அடிகளும்,தென்வடலாக **மேல்புறம்476'3"**நாநூற்றி எழுபத்தி ஆறு அடி,மூன்று அங்குலமும்,இந்த வகை அளவுள்ள **14,030**பதிநான்காயிரத்து முப்பது சதுரடிகள் கொண்ட **30'**அடி அகலமுள்ளதென்வடல் நீள ரோடு ஒன்று பூராவும், இதுவும், பின்னும்,

<u>அயிட்டம் நெ.**2,**</u>

N கிராமம்,N ரீ.சர்வே எண்களில்,

<u>**30'**அடி அகலகிழமேல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி :-</u>

முதலிட்டாளர்கள்பயன்பாடு II-வது இடத்துக்கும் **வடக்கு**, சைட் நெ.**6** முதல்**9** வரை உத்தேசிக்கப்பட்டுள்ள மனையிடங்களுக்கும்**தெற்கு**,ரீ.ச.**109/2B**நெ. காலை பூமிக்கும் **மேற்கு,30'** அடி அகல தென்வடல் ரோட்டுக்கும் **கிழக்கு**, இதன் மத்தியில் கிழமேலாக **வடபுறம்123'7"**நூற்றி இருபத்தி மூன்றுஅடி,ஏழு அங்குலமும், கிழமேலாக **தென்புறம்125'2"** நூற்றி இருபத்தி ஐந்துஅடி, இரண்டு அங்குலமும்,தென்வடலாக **கிழபுறம்30'0"**முப்பது அடிகளும், தென்வடலாக **மேல்புறம்30'0"**முப்பது அடிகளும்,இந்தவகைஅளவுள்ள **3731**மூவாயிரத்து எழுநூற்றி முப்பத்தி ஒரு சதுரடிகள்கொண்ட **30'**அடி அகலமுள்ள கிழமேல் ரோடு ஒன்று பூராவும், இதுவும்,பின்னும்,

<u>அயிட்டம் நெ.**3,**</u>

N கிராமம்,N ரீ.சர்வே எண்களில்,

<u>**23'**அடி அகலகிழமேல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி :-</u>

உத்தேசிக்கப்பட்டுள்ள சைட் நெ.**13-**க்கும் **வடக்கு,**உத்தேசிக்கப்பட்டுள்ள சைட் நெ.**14-**க்கும் **தெற்கு**,ரீ.ச.**109/1A**நெ. காலை பூமிக்கும் **கிழக்கு,30'** அடிஅகல தென்வடல் ரோட்டுக்கும் **மேற்கு**,இதன் மத்தியில் கிழமேலாக **வடபுறம்50'0"**ஐம்பது அடிகளும்கிழமேலாக **தென்புறம்50'0"**ஐம்பது அடிகளும்,தென்வடலாக **கிழபுறம்23'0"**இருபத்தி மூன்று அடிகளும், தென்வடலாக **மேல்புறம்23'0"**இருபத்தி மூன்று அடிகளும்,இந்தவகைஅளவுள்ள **1150**ஓராயிரத்து நூற்றி ஐம்பது சதுரடிகள் விஸ்தீரணம் கொண்ட **23'**அடி அகலமுள்ள கிழமேல் ரோடு ஒன்று பூராவும், இதுவும், பின்னும்,

<u>அயிட்டம் நெ.**4,**</u>

N கிராமம்,N ரீ.சர்வே எண்களில்,

<u>**23'**அடி அகல கிழமேல் ரோட்டுக்குச் செக்குப்பந்தி :-</u>

சைட் நெ.**2** முதல் **5** வரைஉத்தேசிக்கப்பட்டுள்ள மனையிடங்களுக்கும் **வடக்கு,**முதலிட்டாளர்கள் பயன்பாடு I-வது இடத்துக்கும் **தெற்கு,30'**அடிஅகலதென்வடல் ரோட்டுக்கும்**கிழக்கு**,ரீ.ச.**109/2B**நெ. காலை பூமிக்கும் **மேற்கு**, இதன் மத்தியில் கிழமேலாக **வடபுறம்116'5"**நூற்றி பதினாறு அடி,ஐந்து அங்குலமும்,கிழமேலாக **தென்புறம்117'7"**நூற்றிபதினேழு அடிஏழு அங்குலமும்,தென்வடலாக **கிழபுறம்23'0"**இருபத்தி மூன்று அடிகளும்,தென்வடலாக **மேல்புறம்23'0"**இருபத்தி மூன்று அடிகளும்,இந்தவகைஅளவுள்ள **2691**இரண்டாயிரத்து அறூற்றி தொண்ணூற்றி ஒன்று சதுரடிகள் கொண்ட **23'**அடி அகலமுள்ள கிழமேல் ரோடு ஒன்று பூராவும், இதுவும், பின்னும்,

<u>அயிட்டம் நெ.**5,**</u>

N கிராமம்,N ரீ.சர்வே எண்களில்,

**30** அடி அகல தென்வடல் நீள ரோடு ஒன்றும் மற்றும் **30** அடி அகல கிழமேல் ரோடு ஒன்றும், பின்னும்,23 அடி அகல கிழமேல் ரோடு இரண்டும் என உள்ள N ரோடுகளில் சேர்த்து கூடும் (8) எட்டு மூலை முடக்குகளுக்கு **100** நூறு சதுரடிகள் கொண்ட N ரோடுகள் பூராவும், இதுவும், பின்னும்,

அயிட்டம் நெ.**6,**
N கிராமம்,N ரீ.சர்வே எண்களில்,
**1**-வது பூங்காவிற்கான செக்குப்பந்தி :-

ரீ.ச.111 ஆகிய நெ. காலையில் கிழமேலாக போகும் அத்தப்பம்பாளையம் ரோட்டுக்கும்,புறம்போக்குக்கும் **தெற்கு**,உத்தேசிக்கப்பட்டுள்ள சைட் நெ.**21**-க்கும்**வடக்கு,**ரீ.ச.109/1Aநெ. காலை பூமிக்கும் **கிழக்கு,30'** அடி அகல தென்வடல்நீள ரோட்டுக்கும்**மேற்கு,**இதன் மத்தியில் கிழமேலாக **வடபுறம்**கிராசாக55'11"ஐம்பத்தி ஐந்துஅடி,பதினோறு அங்குலமும்,கிழமேலாக **தென்புறம்50'0"**ஐம்பது அடிகளும்,தென்வடலாக **கிழபுறம்50'2"**ஐம்பது அடி, இரண்டு அங்குலமும்,தென்வடலாக**மேல்புறம்75'3"**எழுபத்தி ஐந்து அடி, மூன்று அங்குலமும்,இந்தவகைஅளவுள்ள **3135**மூவாயிரத்து நூற்றி முப்பத்தி ஐந்து சதுரடிகள் கொண்ட பூங்காவிற்கான இடம் ஒன்று பூராவும், இதுவும், பின்னும்,

அயிட்டம் நெ.**7,**
N கிராமம்,N ரீ.சர்வே எண்களில்,
**2**-வது பூங்காவிற்கான செக்குப்பந்தி :-

ரீ.ச.111 ஆகிய நெ. காலையில் கிழமேலாக போகும் அத்தப்பம்பாளையம் ரோட்டுக்கும்,புறம்போக்குக்கும் **தெற்கு**,கடையிடத்திற்கும் **வடக்கு,**ரீ.ச.109/2Bநெ. காலை பூமிக்கும் **மேற்கு,30'** அடி அகல தென்வடல் நீள ரோட்டுக்கும்**கிழக்கு,**இதன் மத்தியில் கிழமேலாக **வடபுறம்61'5"**அறுபத்தி ஒரு அடி,ஐந்து அங்குலமும்,கிழமேலாக **தென்புறம்58'1"**ஐம்பத்தி எட்டு அடி,ஒரு அங்குலமும்,தென்வடலாக **கிழபுறம்50'0"**ஐம்பது அடிகளும், தென்வடலாக **மேல்புறம்65'11"**அறுபத்தி ஐந்து அடி,பதினோரு அங்குலமும்,இந்தவகைஅளவுள்ள **3218** மூவாயிரத்து இருநூற்றி பதினெட்டு சதுரடிகள் கொண்ட பூங்காவிற்கான இடம் ஒன்று பூராவும், இதுவும், பின்னும், ஆக மேற்கண்ட அயிட்டம் நெ.**1**-க்கான**30'**அடி அகலமுள்ள தென்வடல் நீள ரோடு ஒன்றும் மற்றும் அயிட்டம் நெ.**2**-க்கான **30'**அடி அகல கிழமேல் ரோடு ஒன்றும், அயிட்டம் நெ.**3, 4**-க்கான **23'**அடி அகல கிழமேல் ரோடுகள் இரண்டும், அயிட்டம் நெ.**5**-க்கான மூலை முடக்குகள் மற்றும்அயிட்டம் நெ.**6 &7**-க்கான பூங்காவின்இடங்களும் என சேர்ந்துகூடியது மொத்தம் (2607.40Sq.Mt)**28066**இருபத்தி எட்டாயிரத்துஅறுபத்தி ஆறு சதுரடிகள்கொண்ட ரோடுகள் மூலை முடக்குகள் மற்றும் பூங்காவிற்கான பொது இடம் சகிதமும் சேர்ந்தது. இதற்குரிய ரோடுகளையும் மற்றும்பூங்காக்களையும் சேர்த்து பொதுவில் உபயோகித்துக் கொள்ளும் பொது பாத்தியம் சகிதமும் சேர்ந்துஇதற்கு கட்டுப்பட்டது.

N சொத்தின் பழைய க.ச.**146,** தற்போதைய உட்பிரிவின்படி புதிய ரீ.சர்வே எண்.**109/1B&109/2A**. இதன் புதிய பட்டா எண்.**1003&428** ஆகும். N சொத்தானது முன்பு திண்டல் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டு தற்போது ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்டதாகும்.

மேற்கண்ட பூங்கா , சாலை மற்றும் மூலைமுடுக்குகள் உள்ள இடங்கள் ஈரோடு மாநகராட்சிக்கு 31 .10.2018 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 6805 / 2018 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலைகளை ஈரோடு மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். இ2/3357 /2018

**167. அனுமதிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்டுள்ள ஓராண்டு கால மூன்றாண்டு குத்தகை இனங்கள் 31.03.2019 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. 31.03.2019 உடன் உரிமம் முடிவடையும் கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களை 01.04.2019 முதல் 31.03.2022 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அடங்கிய பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிக்கை ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் | ஏல இனம் |
|---|---|---|
| 1. | 2 | சேர்மன் ஆர்.கே. வெங்கடசாமி சாலையில் நேதாஜி தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (அதன் பின்புறம் ஆர்.கே.வி. சாலையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி வணிக மையக் கட்டிடம் செல்லார், தரைத்தளம் முதல் மூன்றாம் தளம் முடிய மற்றும் இந்த கட்டிடத்தை சுற்றியுள்ள மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்டுள்ள காலியிடமும் மற்றும் ஆர்.கே.வி. சாலையில் முதல் மாடியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் நீங்கலாக) |
| 2. | 2 | சேர்மன் ஈ.கே.முகமது அப்துல் கனி சந்தை வளாகத்தில் உள்ள பழைய கட்டிடங்கள் திறந்த வெளியில் அமைக்கப்பட்டு இருக்கும் கடைகள் மற்றும் அதை சுற்றியுள்ள திறந்த வெளியை உபயோகித்துக் கொள்ளும் உரிமத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் (40 இரும்பு பெட்டிக் கடைகள், தார்சு கடைகள் 12, திறந்த வெளி கடைகள் 72, வைப்பறைகள் 7, அலுவலக அறை, மிதிவண்டி நிலையம் நீங்கலாக) |
| 3. | 2 | மண்டலம்-2 மாணிக்கம்பாளையம் அருகில் நடைபெறும் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4. | 4 | நேதாஜி சாலையில் உள்ள ஹெமிங்வே வாரச்சந்தை, தங்கபெருமாள் வீதி மற்றும் நீல்கிரீஸ் சந்து பகுதியில் வாரச்சந்தை மற்றும் பெரியார் நகரில் உள்ள வாரச்சந்தைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 5. | 2 | ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் விளம்பரங்களை தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் |
| 6. | 2 | பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சி தங்கும் விடுதியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 7. | 2 | பேருந்து நிலைய இரண்டாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண். 5-க்கும் 6-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4’x4’ அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண். 1) |
| 8. | 2 | பேருந்து நிலைய மூன்றாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண். 12-க்கும் 13-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4’x4’ அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண். 3) |
| 9. | 2 | பேருந்து நிலைய மூன்றாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண். 16-க்கும் 17-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4’x4’ அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண். 4) |
| 10. | 2 | பேருந்து நிலைய கிழக்குப்புற பிளாட்பாரம் எண். 6-ன் கட்டண கழிப்பிடம் அருகில் ஸ்டோர்கேசிலிருந்து தூண் எண். 3-க்கும் 4-க்கும் இடையில் 4’x4’ அளவில் பூக்கடை வைத்து வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண். 5) |
| 11. | 2 | பேருந்து நிலைய பூக்கடை எண். 6 |
| 12. | 2 | பேருந்து நிலையத்தில் 2 மற்றும் 3-வது பிளாட்பாரங்களில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) |
| 13. | 2 | பேருந்து நிலையத்தில் உள்ள 5, 6 மற்றும் 7-வது பிளாட்பாரங்களில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) |
| 14. | 1 | மண்டலம்-1 சின்னவலசு பெரிய மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 15. | 2 | மண்டலம்-2 பெரியசேமூர் வார்டு எண். 19 மாணிக்கம்பாளையம் |

| | | |
|---|---|---|
| | | பள்ளிக்கூடம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 16. | 2 | மண்டலம்-2 பெரியசேமூர் வார்டு எண். 17 எம்.ஜி.ஆர். நகர் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 17. | 2 | மண்டலம்-2 பெரியசேமூர் வார்டு எண். 17 கனிராவுத்தர் குளம் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 18. | 2 | வ.உ.சி. பூங்கா மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 19. | 2 | பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் வி.சி.டி.வி. சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோக்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 20. | 2 | பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் வி.சி.டி.வி. சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள கார் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 21. | 3 | காந்திஜி வீதியில் உள்ள மாநகராட்சி டாக்சி ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 22. | 2 | வ.உ.சி. பூங்காவில் (சிறுவர் அறிவியல் பூங்கா) நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 23. | 2 | வ.உ.சி. பூங்காவில் நுழைவுக் கட்டணம் |
| 24. | 2 | மண்டலம்-2 ஈரோடு நெடுஞ்சாலை கிராமப்புற உட்கோட்ட பெரியசேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட மரங்களின் மேல் பலனை அனுபவித்தல் (ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம்-சத்தி-கோபி-ஈரோடு சாலை கி.மீ. 160/6-159-2 மற்றும் 159/2-156-2) |
| 25. | 1 | மண்டலம்-2 பிராமண பெரிய அக்ரஹாரத்திற்குட்பட்ட பவானி மெயின் ரோட்டில் கிழபுறமுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டி அருகில் (6’x12’ ஆஸ்பெஸ்டாஸ் கடைகள்-8) மீன்கடை நடத்திக் கொள்ளும் உரிமம் |
| 26. | 2 | வார்டு எண். 16 கங்காபுரத்தில் உள்ள மீன்குட்டையில் மீன் பிடித்துக் கொள்ளும் உரிமம் |

வரிசை எண். 2-ல் குறிப்பிட்டுள்ள சேர்மன் ஈ.கே.முகமது அப்துல் கனி மார்க்கெட்டில் தினசரி சந்தை (Annual lease) மற்றும் 40 பெட்டிக் கடைகளும் (Monthly rent) இயங்கி வருகிறது. மேற்படி தினசரி சந்தை மற்றும் 40 பெட்டிக் கடைகளுக்கும் 31.03.2019 உடன் உரிமக்காலம் முடிவடைகிறது. மேற்படி இடத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.50.00 கோடி செலவில் புதிய வணிக வளாக வளாகம் (ஐந்து மாடிக் கட்டடம்) கட்டப்பட உள்ளதால் மேற்படி ஏல இனத்தை ரத்து செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண். 2 தவிர மீதமுள்ள 25 இனங்களுக்கு 2019-2022-ம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்காணும் வரிசை எண். 1 மற்றும் 3 முதல் 26 வரையுள்ள குத்தகை இனங்களை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும், பொது ஏல அறிக்கையினை ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம். கோப்பு எண். அ1/5131/2018

**168. அனுமதிக்கப்பட்டது.**

6. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு (ஆண்கள் மற்றும் பெண்கள்) 2017-2020-ம் ஆண்டு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ஏலம் எடுத்து 2017-2018 மற்றும் 2018-2019 இரண்டாண்டுகள் நடத்தி வருவதாகவும், தற்போது வசதி குறைவாக இருக்கின்ற காரணத்தால்

தொடர்ந்து நடத்த இயலாததால், 31.10.2018 உடன் இம்மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக அதன் ஏலதாரர் திரு. வி. பழனிச்சாமி என்பவர் தனது 15.10.2018-ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை ரத்து செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி இனத்தினை ஒப்படைக்க வேண்டியுள்ளதால் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**169. அனுமதிக்கப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கரூர் பைபாஸ் ரோடு நஞ்சை ஊத்துக்குளி ரோடு சந்திப்பில் உள்ள வணிக வளாகத்திற்கு பின்புறம் உள்ள 3600 சதுர அடி காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் வசூலிக்கும் உரிமத்திற்கு 01.11.2018 முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 26.10.2018 அன்று நடைபெற்றது. மேற்படி நாளன்று ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு உச்ச கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | கரூர் பைபாஸ் ரோடு நஞ்சை ஊத்துக்குளி ரோடு சந்திப்பில் உள்ள வணிக வளாகத்திற்கு பின்புறம் உள்ள 3600 சதுர அடி காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | **வி. ரமேஷ்** | **12550-** | பி.எம். பழனிச்சாமி | 11500- |

மேற்படி ஏல இனத்திற்கு திரு. வி. ரமேஷ் என்பவர் ரூ.12550-க்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்.

மேற்படி கரூர் பைபாஸ் ரோடு நஞ்சை ஊத்துக்குளி ரோடு சந்திப்பில் உள்ள வணிக வளாகத்திற்கு பின்புறம் உள்ள 3600 சதுர அடி காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு. வி. ரமேஷ் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்படி ஏல இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரியுள்ள திரு. வி. ரமேஷ் என்பவருக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.11.2018 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**170. அனுமதிக்கப்பட்டது.**

8. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கரூர் பைபாஸ் ரோடு நஞ்சை ஊத்துக்குளி ரோடு சந்திப்பில் உள்ள இம்மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்திற்கு பின்புறம் 3600 சதுர அடி (60'x60' அளவு) காலியிடம் உள்ளது. மேற்படி 3600 சதுர அடி காலியிடத்தினை இம்மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் இரு சக்கர வாகன நிறுத்தும் இடமாக பயன்படுத்திக் கொள்ள 2018-2021-ம் ஆண்டிற்கு 01.11.2018 முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அடங்கிய பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை மற்றும் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகை ஆணையர் மற்றும் தனி அலுவலரின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஏல இனம் | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | தேசிய மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை டிமாண்ட் டிராப்ட் தொகை | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளி கேள்வி உறுதி செய்த பின் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1. | கரூர் பைபாஸ் ரோடு நஞ்சை ஊத்துக்குளி ரோடு சந்திப்பில் உள்ள வணிக வளாகத்திற்கு பின்புறம் உள்ள 3600 சதுர அடி காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.50,000- | ரூ.50,000- | உரிமத் தொகை முழுவதும் |

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 2017-2020-ஆம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்காணும் குத்தகை இனத்தினை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி குத்தகை இனத்தினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

**171. அனுமதிக்கப்பட்டது.**

9. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. ரோட்டில் அமைந்துள்ள லூம் வேல்டு கடை எண்.4–ல் காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் வாடகை செலுத்தி நடத்தி வருகிறார்கள். காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் வ.து.எண். ஜி.1099–ன் நிர்வாக இயக்குநர் தனது 25.10.2018–ம் தேதிய கடிதத்தில் லூம் வேல்டு கடையில் கடந்த சில ஆண்டுகளாக வெகுவாக விற்பனை பாதிப்படைந்து சங்கத்திற்கு தொடர்ந்து நட்டம் ஏற்பட்ட காரணத்தால் கடந்த 5 மாதத்திற்கு முன்பு கடையை மூடிவிட்டதாகவும், தற்போது நிரந்தரமாக லூம் வேல்டு கிளையிலிருந்து தங்கள் சங்கத்தை விடுவித்து உரிய அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

எனவே காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும், மேற்படி லூம் வேல்டு கடை எண்.4 கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி மேற்படி கடையினை உடன் ஒப்படைக்க வேண்டியுள்ளதால் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**172. அனுமதிக்கப்பட்டது.**

10. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள A, B, C மற்றும் D பிளாக் ஆகியவற்றுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு நான்காவது முறையாக மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 12.10.2018 அன்று நடைபெற்றது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏலதாரர் பெயர் திரு./திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் திரு. /திருமதி. | ஒப்பந்தப் புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | பேருந்து நிலைய புதிய வணிக வளாகத்தில் இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள A Block | **பி. விஷ்ணுவர்தன்** | **12100-** | வி. சண்முகராஜா | 10250- |
| 2. | பேருந்து நிலைய புதிய வணிக வளாகத்தில் இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள B Block | **பி. விஷ்ணுவர்தன்** | **12150-** | வி. சண்முகராஜா | 10400- |
| 3. | பேருந்து நிலைய புதிய வணிக வளாகத்தில் இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள C Block | **பி. விஷ்ணுவர்தன்** | **12200-** | வி. சண்முகராஜா | 10650- |
| 4. | பேருந்து நிலைய புதிய வணிக வளாகத்தில் இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள D Block | வி. சண்முகராஜா | 10800- | **பி. விஷ்ணுவர்தன்** | **12250-** |

பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள A, B, C மற்றும் D பிளாக் ஆகியவற்றுக்கு மேற்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை கோரியுள்ளார்கள். மேற்கண்ட ஏல இனங்களுக்கு மூன்று முறை நடைபெற்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. நான்காவது முறையாக நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில்

மேற்கண்ட நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு, திரு. பி. விஷ்ணுவர்தன் என்பவர் A, B, C மற்றும் D பிளாக் ஆகியவற்றுக்கு ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகை கோரியுள்ளார்.

பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள A, B, C மற்றும் D பிளாக் ஆகியவற்றுக்கு திரு. பி. விஷ்ணுவர்தன் என்பவர் மேற்கண்டுள்ளவாறு

கோரிய ஒப்பந்தப்புள்ளி உச்சக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்கண்டுள்ளவாறு பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள A, B, C மற்றும் D பிளாக் ஆகியவற்றுக்கு ஒப்பந்தப்புள்ளி உச்ச கேள்வித் தொகை கோரிய திரு. பி. விஷ்ணுவர்தன் என்பவருக்கு 01.10.2018 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படைக்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**173. அனுமதிக்கப்பட்டது.**

11. ஈரோடு மேற்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு.கே.வி.இராமலிங்கம் அவர்களின் 30.08.2017—ம் நாளிட்ட கடிதத்தில் மறைந்த மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களின் திருவுருவச் சிலையை பன்னீர் செல்வம் பூங்காவில் வைக்க அனுமதி கோரியுள்ளார். தற்போது சிலை வைக்க அனுமதி கோரும் இடத்தில் ஏற்கனவே தலைவர்கள் சிலை உள்ளதாலும் மற்றும் ஏற்கனவே உள்ள சிலைகளின் அருகில் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களின் சிலையை வைக்க சாத்திய கூறு உள்ளதா்லும் மேற்படி சிலை தொடர்பாக நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

அனுமதி வழங்கலாம். (இ2/4529/2017)

**174. அனுமதிக்கப்பட்டது.**

12. ஈரோடு மாநகராட்சி மண்டலம்—3—க்குட்பட்ட வார்டு எண்.33 பெருந்துறை ரோடு பகுதியில் LITTLE SISTERS OF THE POOR HOME FOR THE AGED என்ற அமைப்பு இயங்கி வரும் கட்டிடத்திற்கு சொத்துவரி விலக்கு அளிக்க கோரி 05.10.2018 அன்று விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி கட்டிடத்தில் LITTLE SISTERS OF THE POOR HOME FOR THE AGED என்ற பெயரில் ஆதரவற்ற முதியவர்களுக்கு உணவு மற்றும் உறைவிடம் இலவசமாக வழங்கப்படுகிறது.

எனவே ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 123 (c) & (e)—ன் அடிப்படையில் மேற்படி கட்டிடத்திற்கு 01.04.2018 முதல் சொத்துவரி விலக்களிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதி வழங்கலாம். கோப்பு எண். அ1/3439/2018

**175. அனுமதிக்கப்பட்டது.**

13. ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு இம்மன்றத் தீர்மானம் எண். 758, நாள். 30.09.2008ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மேற்படி பணியை Kfw நிதியுடன் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.249, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.12.2008ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணயரகம், சென்னை–5 அவர்களின் செயல்முறைகள் ஆணை கடிதம் ந.க.எண்.55420/2008/வஅ2, நாள்.20.05.2009ல் சிப்பம் 1, சிப்பம் 2, சிப்பம் 3, சிப்பம் 4 ஆகியவைகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு சிப்பம் 5, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையப் பணியினை விதிகளுக்குட்பட்டு DBOT (Design, Build, Operate and Transfer) படி மேற்கொள்ளும்படி அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

மேற்கண்ட பாதாள சாக்கடைத் திட்டம் பணிகளுக்கு திட்டம் செயலாக்க அலகு (PIU) அரசாணை (பத்தாண்டு) எண்.438, நாள் 30.09.2009ல் கீழ்கண்ட பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | தோற்றுவிக்கப்பட்ட பணியிடத்தின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தலைமை / கண்காணிப்பு பொறியாளர் (CE/SE) | 1 |
| 2 | செயற்பொறியாளர் (EE) | 2 |
| 3 | உதவி செயற்பொறியாளர் (AEE) | 4 |
| 4 | உதவி பொறியாளர் (AE)/இளநிலைப்பொறியாளர் (JE) | 8 |
| 5 | முதல்நிலை வரைவாளர் (Sr.Draughtman) | 1 |
| 6 | வரைவாளர் (D.man) | 1 |
| 7 | தொழில்நுட்ப உதவியாளர் (TA) (பணி ஆய்வாளர்) (WI) | 8 |
| 8 | கணக்கு அலுவலர் (Acct. Officer) ( கணக்காளர்) | 1 |
| 9 | உதவியாளர் | 1 |
| 10 | புள்ளி விபர குறிப்பாளர் 1 (சுருக்கெழுத்தர் தட்டச்சர்) | 1 |
| | **மொத்தம்** | **28** |

மேற்படி அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் ஏற்கனவே கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்திற்கு 31.12.2020 வரை அல்லது திட்டப்பணி முடிவடையும் வரை நீட்டிப்பு கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக அரசின் அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. தற்போது கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தை தவிர தேவைப்படும் இதர கீழ்கண்ட பணியிடங்களுக்கு 31.12.2020 வரை நீட்டித்துக் கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(பகுதி 1) நீட்டிப்பு தேவைப்படும் பணியிடங்களின் விவரம்**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது நீட்டிப்பு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | கண்காணிப்பு பொறியாளர் | 1 | 1 |
| 2 | செயற்பொறியாளர் (EE) | 2 | 1 |
| 3 | உதவி செயற்பொறியாளர் (AEE) | 4 | 3 |
| 4 | உதவி பொறியாளர் (AE)<br>இளநிலை பொறியாளர் (JE) | 8 | 4 |
| 5 | வரைவாளர் (D.man) | 1 | 1 |
| 6 | தொழில் நுட்ப பணியாளர்<br>(TA) / பணி ஆய்வாளர் (WI) | 8 | 3 |
| | **மொத்தம்** | **24** | **13** |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) மேற்கண்ட பகுதி 1ல் குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கு மட்டும் 31.12.2020 அல்லது திட்டப்பணிகள் முடிவடையும் வரை பணியிட நீட்டிப்பெற அனுமதிக்கலாம்.
2) இதற்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து வழங்கலாம்.
3) மேற்படி நீட்டிப்பு கோரும் பணியிடங்களுக்கு அரசின் அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக பிரேரணை சமர்ப்பிக்கலாம்.

(இ4/8116/2015)

**176. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

14. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்ய அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை நாள் 30.04.1997–ன்படி 2081 நபர்கள் தேவைப்படுகிறது. தற்போது இம்மாநகரரட்சியில் 604 நபர்கள் நிரந்தர துப்புரவு பணியாளர்களாகவும், 607 நபர்கள் சுயஉதவிக்குழு மூலம் புற ஒப்படைப்பு முறையில் மாமன்ற அனுமதி பெற்று துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து வருகிறார்கள். மேற்கொண்டு 870 பணியிடங்கள் தேவைப்படுகிறது. எனவே சுயஉதவிகுழு மூலம் பணிபுரியும் 607 பணியிடங்கள் மற்றும் காலியாக உள்ள 870 பணியிடங்கள் ஆக மொத்தம் 1477 பணியிடங்களை சுய உதவிக்குழு மூலம் அல்லது புற ஒப்பந்த அடிப்படையில் பூர்த்தி செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டி உரிய கருத்துரு அனுப்ப ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

அனுமதி வழங்கலாம். கோப்பு எண். எச்1/2808/2018

**177. அனுமதிக்கப்பட்டது.**